GCI

# சபை நிறுவுதல

## முகவுரை

பாடத்திட்ட நோக்கம்:

- புதிய சபைகளை நிறுவுவதன் அவசியம் உணர.
- சபைகளை நிறுவுவதின் வேதக் கொள்கைகளைக் கண்டறிய.
- சபைகளை நிறுவுவதன் வழிகளை ஆராய.
- நிகழ்கால சபைகளை நிறுவும் ஊழியத்தில் பயன்படுத்தப்படும் உத்திகளைக் கண்டறிய.
- சபைகளை நிறுவுவதில் உள்ள பாடுகளைப் புரிந்து கொள்ள.

## பாட மேற்பார்வை

**I** முகவுரை

A. சபை என்றால் என்ன?
B. ஏன் புதிய சபைகளை நிறுவ வேண்டும்?
C. சபைகளை நிறுவுவதின் நடைமுறை சாத்தியக்கூறு

**II.** சபைகளை நிறுவுவதின் வேத அடிப்படைக் கொள்கைகள்

A. சபை நிறுவுபவரின பொறுப்புகள்
1. பிரதான கட்டளை நிறைவேற உழைப்பவர்
2. முக்கிய அர்ப்பணிப்புகளைச் செய்ய மக்களுக்கு உதவுதல்
3. விசுவாசிகளின் சபையை நிறுவி நிர்வகித்தல
B. சபை நிறுவுபவரிடம் பொதுவாக இருக்க வேண்டியவை : ஐந்து வேதாகமக் கொள்கைகள்
C. சபை நிறுவுபவரிடம் விசேஷமாக இருக்க வேண்டியவை : பதினொன்று முக்கிய குணுதிசயங்கள

**III.** சபைகளை நிறுவுவதின் நடைமுறைக் கொள்கைகள்

A. அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கும் இடத்தை நிர்ணயிக்க வேண்டும்.
B. பலன் தரும் குழுவைக் கண்டறிந்து அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.
C. சபை நிறுவும் ஊழியம் நல்ல நிலத்தில் செய்யப்படுவது சிறந்தது.
D. சபை நிறுவும் ஊழியம் முதலில் பெரியவர்கள் மத்தியில் செய்யப்படுவது சிறந்தது.
E. பயனில்லாத மற்ற செயல்களில் கவனத்தைத் திசை திருப்பாதீர்கள்.

GCI

G. எல்லாவற்றையும் எளிமையாகக் கையாளுங்கள்.
H. எதிர்ப்பு உள்ள பகுதிகளில் அதிக சத்தம் போடாதீர்கள்.
I. உங்களோடு ஊழியம் செய்ய அழைக்கப்பட்ட, வரம் பெற்ற மற்றும் தாழ்மையான ஆண்களையும் பெண்களையும தேர்ந்தெடுங்கள்.
J. உங்கள் வாய்ப்புகளை ஞானமாய்ப் பயன்படுத்துங்கள்.

IV. நிகழ்கால சபை நிறுவும் வழிமுறைகள்
A. தாய் - மகள் சபை நிறுவுதல்
B. வேத பாடக் குழு வழிமுறை
C. செல்குழு அபிவிருத்தித் திட்ட வழிமுறை
D. உள்ளூர் ஐக்கியத்தின் வழியில்
E. புதிதாகச் சபை நிறுவுபவர்
F. திறந்த வெளிப் பிரசங்க மையங்கள்
G. ஒரே கட்டிடத்தில் இரண்டாவது சபை
H. ஒரே கட்டிடத்தில் வேறொரு மொழி ஆராதனை
I. "துணைக்கோள்" சபைகள்

V துன்பங்கள் மற்றும் நெருக்கங்களையும் எதிர்கொள்ளுதல்
A. சபை நிறுவுதலில் உள்ள ஆவிக்குரிய நெருக்கடிகள்
B. சபை நிறுவுதலில் உள்ள ஊழியரீதியான நெருக்கடிகள்

VI சபை வளர்ச்சிக்குத் உதவும் தத்துவங்கள்.
A. ஆவிக்குரிய வளர்ச்சி
B. எண்ணிக்கை வளர்ச்சி
C. இடரீதியான வளர்ச்சி

VII. சுய ஆளுமையுள்ள சபை நிறுவுதல்
A. சுய ஆளுமையுள்ள சபை நிறுவுதலின் தத்துவங்கள்
B. சபை நிறுவுதலில் உள்ள கடின காரியங்கள்

GCI

## I முகவுரை

மததேயு 28: 19-20; மாற்கு 16: 15; ரோமர் 1:16

ரோமர் 1:16

***கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது***

போ, போ, போ

- பாரம்பரிய கண்ணோட்டம்

  சரியான அடிப்படையில் சபையை நிறுவுங்கள். ஊழிய மையத்தைக் கட்டுங்கள. பின்பு ஊழியத்தைத் தீர்மானியுங்கள. அவவாறு செய்வது நமக்குக் கொடுக்கப்பட்ட பிரதான கட்டளையை நிறை வேற்றாமல் வேறே ஊழியங்களைச் செயவதாகி விடும்.

- வேதாகமக் கண்ணோட்டம்
  ஊழியம் துரிதமாகச் செய்ய வேண்டும் என்பது வலியுறுத்தப் பட்டுள்ளது.

  **அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

  **36. விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். யோவான் 4: 35**

- பிரதான கட்டளை சபையின் எல்லா பகுதிகளையும், நபரையும் ஆளுகை செய்ய வேண்டும்.

- இது 4 பகுதிகளால் ஆன கட்டளைகளை தனித்தனியே நிறைவேற்றாமல் ஒரே வேளையில் செய்யப்பட வேண்டும். கடைசிக் கட்டளை நிறைவேற காலம் எடுத்தாலும் மற்றவை சில தியாகம் மற்றும் விசுவாசத்தால் இலகுவாக நிறைவேற்றி விடலாம். பயண இலகு மற்றும் சபையின் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் உதவியால், இந்த கடைசி நாட்களில் ஊழிய வளர்ச்சி அதிகமாகக் காணப்படுமென்பதில் சந்தேகமில்லை.

  ***பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.* அப். 1: 8**

GCI

A. சபை என்றால் என்ன?

ஸ்தல சபை கீழ்க் கண்ட நான்கு வித செயல்களில் அடிப்படையில் வரையறுக்கப்படலாம்.

1. குறிப்பிட்ட ஒரு ஸ்தலத்தில் இயேசுவை ஆராதிக்கக் கூடிவரும் விசுவாசிகளின் கூட்டம்.
2. ஐக்கியத்திற்காகக் கூடி வரும் ஒரு குடும்பம்.
3. சீடித்துவத்திற்கான ஒரு பள்ளி
4. முழு வீச்சில் செயல்படும் சுவிசேஷ அமைப்பு

B. ஏன் புதிய சபைகளை நிறுவ வேண்டும்?

1, மறு விளைவிப்பின் தத்துவம் - 'தங்களில் தங்கள் விதையையுடைய' ஆதியாகமம் 1 : 12

a. தாவர மற்றும் விலங்கியல் ராஜ்யம்

வேதாகமத்திலுள்ள மறு விளைவிப்பின் தத்துவம் - 'தங்களில் தங்கள் விதையையுடைய' – மிக விஸ்தாரமான அப்பியாசம் உடையதாய் இருக்கிறது. தானிய வகைக்கு அது எவ்வளவு பொருந்துகிறதோ, அது போல ஜீவராசிகளுக்கும் அது பொருந்தும். (1:24)

b. சபை சபையைப் பிறப்பிக்கிறது.

தேவனால் ஏற்படுததப்பட்ட மறு விளைவிப்பின் தத்துவமானது கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்திற்கு சம அளவில் அப்பியாசம் உடையதாய் இருக்கிறது. சாட்சி பகரும் கிறிஸ்தவர்கள் வேத வசனத்தின் விலையேறப் பெற்ற விதை விதைப்பதன் வாயிலாக மேலும் பல ஆத்துமாக்கள் இரட்சிக்கப் பட்டு சபையில் அங்கமாகிறார்கள். மறு விளைவிப்பின் அதே தத்துவத்தில் சபைகள் சபைகளைப் பிறப்பிக்கின்றன.

2. பிரதான கட்டளையின் இயல்பான வெளிப்பாடு
மததேயு 28: 18-20; மாற்கு 16: 15

3. பிரதான கட்டளை நிறைவேற பயனுள்ள வழி

4. சமுதாய வளர்ச்சிக்கு முக்கியத் திட்டத்தைக் கொடுக்கிறது.

GCI

5. எல்லாப் பகுதிகளிலும் தேவை உள்ளதாய் இருக்கிறது.

   a. சந்திக்கப் படாத சமுதாயங்களில் (புது நிலம்)

   b. நகர்ப்பற மையங்களில் ( பழைய நிலம் )

6. புதிய தலைமைத்துவ வளர்ச்சிக்கு உதவுகிறது.

C. சபைகளை நிறுவுவதின் நடைமுறை சாத்தியக்கூறு

வேதத்தின் அடிப்படையிலானது மட்டுமன்றி, நடைமுறை சாத்தியமும் கூட.

சபைகளை நிறுவுவது என்பது வேதத்தின் அடிப்படையிலானது மட்டுமன்றி, நடைமுறையிலும் சாத்தியமான ஒன்று ; அது கிரியை செய்யக் கூடியது.

சபைகளை நிறுவுவது என்பது வேதத்தின் அடிப்படையிலானது என்பதால் மட்டுமல்லாமல் அதன் சுவிசேஷ ஊழியத்தன்மையினிமித்தமாகவும் இது மிக இன்றியமையாததாகிறது என்பார் சார்லஸ் சானே என்னும் அறிவர்.

எல்மர் டவுன்ஸ் சொல்கிறார் : எல்லா வித சுவிசேஷ ஊழியத்திற்கும் அவைகளுக்குரிய இடமுண்டு, ஆனால் மிக அதிகப் பயனள்ள வழிமுறை என்பது நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் புதிய ஏற்பாட்டு சபையை நிறுவுவதேயாகும்.

1) சபையின் சவால்கள்

   a) சந்திக்கப் படாத மக்களின் பெருக்கம்

   b) உண்மையான கிறிஸ்தவரல்லாத பெயர் கிறிஸ்தவரின் எண்ணிக்கையில் வளர்ச்சி

   c) கிறிஸ்தவக் கொள்கைகளுக்கு எதிரானவர்கள். நாத்திகவாதிகள், மார்க்சிஸககாரர்கள் போன்ற மேலும் பலர்

2) மக்களைக் குறித்த புள்ளி விவர காரியங்கள்

சபை நிறுவுதலைத் தாக்கம் செய்யக் கூடிய மக்களைக் குறித்த புள்ளி விவர காரியங்கள் உலகெங்கும் நிறைவேறி வருகின்றன.

   a) நகர்மயமாக்கல்

   கிராமப் புறங்களிலிருந்து நகர்புறங்களுக்கு மக்கள் குடிபெயர்வது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஏசியா வீக் என்னும்

GCI

பத்திரிக்கையின் கணிப்புப்படி, 2020 ல் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் கிராமத்தை விட்டு இடம் பெயருவா எனக் கூறப்பட்டுள்ளது.

சபையை எதிர்நோக்கியிருக்கும் சவால்களில் முக்கியமான ஒன்று நகரங்களாகும். ஆனால் சபைகள் கிராம மற்றும் நகர்புறங்களை சம அளவில் முக்கியத்துவம் கொடுத்து ஊழியம் செய்ய வேண்டும். நகர் புறங்களில் அதிகமாகச் சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

b) மக்கள் தொகை இடப்பெயாச்சி

சமுதாயத்தில் மக்களைக் குறித்த புள்ளி விவர சவால்களில் அடுத்த முக்கிய காரணி மக்கள் தொகை இடப்பெயாச்சியாகும்.

எஸ்ரு ஜோன்ஸ் என்பவர் இதை பிரதான காரணியாகக் கொண்டு புதிய சபைகளை நிறுவ வேண்டுமென்கிறார். மக்கள இடப்பெயாச்சியாகும் காலமெல்லாம் புதிய சபைகள் அவசியம் என்பது அவரது கூற்று.

காட்ஜஸ் (Hodges) : "ஒருவர் தன் குடும்பத்தையும், நண்பர்களையும, சொந்த நகரததையும் விட்டு புதிய ஒரு இடத்தில் இருக்கும் நேரத்தை விட சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள சிறந்த நேரமாக மற்ற நேரத்தைக் கருத முடியாது. தனது முந்தைய சூழலில் இருந்த தடைகள் இல்லாததால் இப்பொழுது அவரால் சுவிசேஷத்தை சுதந்தரமாக ஏற்றுக் கொள்ள முடிகிறது. எப்படியாயினும் இப்படிப்பட்ட நபரைச் சந்திப்பதின் வாயிலாக நமது சபைகள் விரைவான வளர்ச்சி அடைகின்றன."

## II. சபைகளை நிறுவுவதின் வேத அடிப்படைக் கொள்கைகள்

### A. சபை நிறுவுபவரின பொறுப்புகள்

1. பிரதான கட்டளை நிறைவேற உழைப்பவர்

அ. புதிதாகத் தெரிந்து கொள்ளப்பட்ட பகுதிக்கச் செல்லுதல்

ஆ. மக்களுக்குடன் நல்ல உறவு

இ. கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவித்தல்

ஈ. அவிசுவாசிகளுக்கு இரட்சிப்பு

உ. ஆவியிலும் தண்ணீரிலும் ஸ்நானம் கொடுத்தல்

GCI

ஊ. கிறிஸ்துவின் கட்டளைக் கைக்கொள்ளப் போதித்தல்

எ. சீஷராக்குதல்

2. 3 முக்கிய அர்ப்பணிப்புகளைச் செய்ய மக்களுக்கு உதவுதல்

அ. இரட்சிப்புக்காக கிறிஸ்துவிடம் அர்ப்பணிப்பு

ஆ. வளர்ச்சிக்காக கிறிஸ்துவின் சரீரத்திற்கு அர்ப்பணிப்பு

இ. கிறிஸ்துவின் கிரியைகளுக்குக் கீழ்ப்படியும் அர்ப்பணிப்பு

3. விசுவாசிகளின் சபையை நிறுவி நிர்வகித்தல்

அ. இரட்சிக்கப்படுகிறவர்களை அங்கத்தினராக்குதல

ஆ. அர்த்தமுள்ள ஆராதனையை ஏற்படுத்துதல்

இ. ஐக்கியக் கூடுகைகளை ஒழுங்குபடுத்துதல்

ஈ. சேவைக்கான வாய்ப்புகளை வழங்குதல்

உ. சரியான வசதிகளைக் கண்டறிதல்

B. சபை நிறுவுபவரிடம் பொதுவாக இருக்க வேண்டியவை : ஐந்து வேதாகமக் கொள்கைகள்

அனைவருமே சபை நிறுவத் தேர்ச்சி பெற்றவரல்ல. அவ்வாறு தேர்ச்சி பெறாத ஒருவர் சபை நிறுவினால் பாதகமான விளைவினை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. அவ்வாறு முயல்வது தவறான நிர்வாக முறை மட்டுமன்றி, அவரைக் குற்ற உணர்வுக்குள்ளாக்கவும, சோர்வடையவும் செய்கிறது. I கொரிந்தியர் 9 : 19 – 23

I கொரிந்தியர் 9 : 19 – 23

நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.

20. யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவும் ஆனேன்.

21. நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன். அப்படியிருந்தும், நான்

GCI

தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணம் இல்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உள்ளானவனாய் இருக்கிறேன்.

22. பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்ளூ எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.

23. சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்.

இலக்கு : இயன்ற அளவு அதிகமானவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ள வ.19

நமது இலக்கை அடைவது எப்படி?

1. பணிவிடையின் ஆவி : சுய உரிமைகளை விட்டுவிட <u>விருப்பம</u>

நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், என்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். வ.19

2. அடையாளப்படுத்திககொள்ளுதல் = ஆதாயப் படுத்த விரும்பும் நபருடன் ஒருவராக மாற முயலுங்கள். வ. 20 - 22

*"யூதருக்கு*
*நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்கள்*
*நியாயப்பிரமாணமில்லாதவர்கள்*
*பலவீனர்*
*நான் எல்லாருக்கும் எல்லாமானேன்."*

3. சூழ்நிலைமையமாக்கள் - இலக்கை அடையச் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்ய முயலுங்கள். வ. 22

"*நான் எல்லாருக்கும் எல்லாமானேன்* "

4. செயல்முறை – சாததியமான சகல வழிகளையும் கையாண்டு இலக்கை அடைய முயலுங்கள்.

"எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு" வ. 22

5. உந்து சக்தி – சரியான உளநோக்கம் கொண்டிருங்கள்.

*"சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்."* வ. 23

C. சபை நிறுவுபவரிடம் விசேஷமாக இருக்க வேண்டியவை : பதினொன்று முக்கிய குணதிசயங்கள்

GCI

கீழ்க்காணும் பதினொன்று குணதிசயங்களும் Charles E Fuller (Institute of Evangelism and Church Growth, 1984) என்பவரால் உருவாக்கப்பட்ட 46 குணதிசயங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

நல்ல சபை நிறுவும் ஊழியம் செய்பவர் :

1. ஊக்கமாக ஜெபிப்பவர்

அ, ஜெப வாழ்வைத் தன் முதல் காரியமாக வைத்திருப்பார்.

ஆ, தினமும் குறிப்பிட்ட நேரத்தில் ஜெபித்து நிலையான தியான வாழ்வுடையவர்.

இ, தனிப்பட்ட காரியங்களுக்காகவும் ஊழியத்திற்காகவும் விசேஷமாக ஜெபிப்பவர்.

2. விசுவாசத்தைப் பயன்படுத்துபவர் :

அ, சபை நிறுவும் ஊழியம் செயயும் அழைப்பைக் குறித்த நிச்சயம் உடையவர்.

ஆ, தேவ கிரியையில் விசுவாசமுள்ளவர்

இ, எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கைக்காக அறியப்பட்டவர்

ஈ, விசேஷ ஜெபக்குறிப்புகளுக்கான பதிலுக்காக காத்திருக்க விரும்புபவர்.

3. தரிசனம் உடையவர்

அ, நிகழ்காலம் மட்டுமன்றி வரும் காலத்திற்காகவும் செயல்படுபவர்.

ஆ, ஊழியத்தைக் குறித்த தத்துவம் மற்றும் தரிசனத்தை வெளிப்படுத்தும் கருவை வளர்க்கிறார்.

இ, தரிசனத்தை மக்களிடம் வெற்றிகரமாகக் கொண்டு செல்கிறவர்.

ஈ, சவால்களைத் தடையாக அல்லாமல் வாய்ப்புகளாக அணுகுபவர்,

உ, தரிசனமில்லாதவைகளைத் தேர்ந்த விதத்தில் கையாளுகிறார்.

ஊ, தேவனுடைய, தன்னுடைய மற்றும் மற்றவர்களுடைய திறமைகளைக் குறைத்து மதிப்பிடாதவர்

GCI

எ, தரிசனத்துக்கேற்ப சபையைத் தெளிவான நிலையில் அடையாளப்படுத்துதல்.

ஏ, பெரிய காரியங்களுக்காகத் தேவனை விசுவாசிப்பவர்

4. சபையின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்

அ, சபை வளர்ச்சி வேதத்தின் அடிப்படைக் கொள்கை என நமபுகிறார்.

ஆ, திடீர் வெற்றியை விட நிலையான வளர்ச்சியைப் பாராட்டுகிறார்.

இ, ஆவிக்குரிய மற்றும் உறவுரீதியான வளர்ச்சியின் அடிப்படையில் சபை மக்களின் எண்ணிக்கையில் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்.

ஈ, வளர்ச்சியின்மை அபாயகரமான மற்றும் சுய தோல்வியை ஏற்படுத்தும் என அறிந்திருப்பவர்

உ, குறிப்பிடட காலத்திற்குள் தமது சபையைப் பொருளாதார நிலையில் சுயமாகத் தாங்கும் நிலைக்குச் சபையைக் கொண்டு செல்பவர்.

ஊ, சாதாரணமாக சபையை இருந்த நிலையில் மட்டும் பராமரிப்பவரல்ல.

எ, சபையின் எந்தக் காரியத்தையும் தேவ ராஜ்யத்தின் அடிப்படையில் காண்கிறவர்.

ஏ, சபை நிறுவும் ஊழியத்தில் நேரடி அனுபவம் பெறுகிறவர்.

5. உள்ளார்ந்த ஊக்கத்தால் நிரம்பியவர்

அ, சிறப்பான செயல்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்.

ஆ, இடைவிடாத முயற்சியுடையவர்.

இ, உத்வேகமுடன் முதல் முயற்சி செய்பவர்.

ஈ, புதிதாக ஒன்றுமில்லாத நிலையிலிருந்து உழைக்கத் தயக்கம் காட்டாதவர்.

உ, நீண்ட காலக் கடின உழைப்பிற்குத் தன்னை அர்ப்பணித்தவர்.

6. ஊழியத்தில சொந்தம் பாராட்டுபவர்

GCI

அ, ஊழியத்தின் வளர்ச்சி மற்றும் வெற்றியில் மற்றவர்களையும் பங்கு உடையவர்களாக மாற உதவி செய்பவர்

ஆ, தரிசனத்துக்கு தன்னை அர்ப்பணிக்கும் வகையில் மக்களுக்கு உதவுகிறவர்.

இ, சபையின் தனித்தன்மையை நிலைநாட்டுபவர்.

ஈ, சபை மீது தேவையற்ற இலக்குகளைத் திணிக்காதவர்.

7. பிறரின் வரங்களைப பயன்படுத்துபவர்.

அ, ஊழியப் பணியைச் செய்ய மக்களுகககு உதவி செய்பவர்.

ஆ, மற்றவர்களின் வரங்களைப பகுத்தறிபவர்

இ, மக்களின் வரங்களுக்கெற்ப ஊழியப் பணியையும் வாய்ப்புகளையும் பொருத்துகிறவர்.

ஈ, தனி நபர் வரையறைக்குட்பட்டு மக்களுக்குப் பொறுப்புகளைக் கொடுப்பவர்.

உ, மற்றவர்கள் ஆயத்தமாகுமுன் ஊழியப் பொறுப்புகளைக் கொடுக்காதவர்.

ஊ, மற்றவர்களின் வரங்களைப பயனபடுத்தத் தேவையற்ற நிபந்தனைகளை விதிக்காதவர்.

8. பலனுள்ள வகையில் உறவை வளர்க்கிறவர்.

அ, மற்றவர்களின் தேவைகள் மற்றும் அவசியங்களைப் பரிவுடன் நோக்கி ஏற்ற உதவிகளைத் துரிதமாகச் செய்பவர்.

ஆ, மற்றவர்கள் மீது பக்தியுள்ள அன்பு மறறும் கரிசனையைக் காண்பிப்பவர்.

இ, மற்றவர்களைத் தனிப்பட்ட விதத்தில் அறிய விரும்புகிறவர்.

ஈ, தனக்கு முன்பாகப் பாதுகாப்பாகவும் வசதியாகவும் உணரப்படக்கூடியவர்

உ, புதியவர்களுடன் நியாயந்தீர்க்கும் வகையில் பழகாதவர்.
ஊ, பல தரப்பட்ட மக்களையும் அன்பாய் ஏற்றுக்கொள்பவர்.

எ, சபை மக்களுடன் தகுதியான நேரம் செலவழிப்பவர்.

9. இணக்கமுள்ளவராகவும் சூழ்நிலைக்கேற்ப தன்னை வளைந்து கொள்பவர்.

அ, இக்கட்டுகளை நேர்த்தியாகச் சமாளிப்பவர்

ஆ, தொடர்ச்சியான மற்றும் திடீர் மாற்றங்களைச சமாளிப்பவர்.

இ, சபை நிறுவும் ஊழியத்திற்காக தன்னையும் தன் ஊழியத் திட்டங்களையும மாற்றிக் கொள்கிறவர்.

ஈ, சபை வளர்ச்சியின் பல பகுதிகளிலும் தேவைகளையும் வலியுறுத்தல்களையும் ஏற்ற மாற்றங்களைக கொண்டுவருபவர்.

உ, எப்பொழுதெல்லாம் என்னென்னவெல்லாம் செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்பவர்.

10. குடும்ப ஒத்துழைப்பைப் பெற்றவர்

அ, குடும்பத தலைவராகத் தன் துணைவிக்குச் செய்ய வேண்டியதையும் ஊழியத்தைக் குறித்தும் ஒத்தக் கருத்து

ஆ, தன் வீட்டை அலுவலகமாக உபயோகப்படுத்துவதில் தனிப்பட்ட நியமங்களைக கொண்டிருப்பவர்.

இ, ஊழியத்தின் விளைவு மற்றும் தன் குழந்தைகளின் தேவை ஆகியவற்றை மதிப்பிடுபவர்.

ஈ, தனிப்பட்ட மற்றும இணைந்து செய்யும் செயல்களில் தன் மனைவியுடன் குழுவாகச் செயல்படுபவர்.

உ, புதியவர்களைக் கையாளத் திட்டம் வைத்திருப்பவர்.

ஊ, சபை மற்றும் சமுதாயத்திற்கு முன்பாக நல்ல முன் மாதிரி.

எ, ஊழியத்தை மற்றும் தரிசனத்தை மனைவியுடன் பகிர்ந்துகொள்பவர்.

ஏ, தனிப்பட்ட குடும்பப் பாதுகாப்பைத் திட்டமிட்டுச் செயல்படுபவர்.

11. சபை என்னும் ஒருமித்த சரீரத்தைக் கட்டுபவர்.
அ, சிறந்த குழுவாக ஒருமித்த வளர்ச்சியை அடித்தளமாக்குபவர்.



GCI

GCI

ஆ, புதியவர்களையும் குழுவாக சபையில் இணைந்து செய்யும் செயல்களில ஈடுபடுத்துபவர்.

இ, சபை மக்களின் ஒழுக்க ரீதியான வாழ்வைக் கண்காணிப்பவர்.

ஈ, குழுவைப் பயனுள்ள வகையில் நடத்திச் செலபவர்.

## III. <u>சபைகளை நிறுவுவதின் நடைமுறைக் கொள்கைகள</u>

A. அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கும் இடத்தை நிர்ணயிக்க வேண்டும்.

மத்தேயு 9 :37-38

*"தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்ளூ ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்."*

புதிய சபை நிறுவச் சிறந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகள்

1, ஜெபித்துப் பரிசுத்தாவியின் உதவியை நாடுங்கள. அப் 16 : 15

a) துவங்குமுன ஜெபியுங்கள். அப். 13 : 3

*"அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்."*

b) சூழ்நிலைகளின் வாயிலாகத் தேவ நடத்துதலை அறியுங்கள.
அப். 13: 49 – 51

*"கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.*
*யூதர்கள் பக்தியும் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள். இவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிப்போட்டு, இக்கோனியாபட்டணத்துக்குப் போனார்கள்."*

c) சில புதிய வழிகளைத் திறக்கும் படியாக சில கதவுகளை அடைக்கிறாரென்று அறியுங்கள். அப். 16: 6

*"அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு"*

GCI

2. தேர்ந்தெடுக்கும் இடத்தைக் குறித்து விவரங்களை அறியுங்கள்.

அ) கூடுமானால் வரை படத்தைப் பெறுங்கள.

ஆ) அப்பகுதியிலுள்ள மக்களைப் பார்வையிடுங்கள.

- அவர்களுடன் பேசுங்கள்.
- துண்டு பிரதி விநியோகியுங்கள.
- நீங்கள ஒரு வேத போதகரெனவும் குழு வேத பாடம் நடத்த ஆவலாயிருப்பதையும் சொல்லுங்கள்.

3. ஆய்வு நடத்துங்கள்.

a) தேர்ந்தெடுக்கும் இடத்தில் சுவிசேஷ ஊழியம் செய்யும் சபை இல்லாத பகுதியைக் கணக்கில் கொள்ளுங்கள.

b) புதிய ஊழியத்தைத் தாங்கக்கூடிய சபை அல்லது குழுவின் தலைவர் அல்லது போதகரைச் சந்தியுங்கள்.

c) ஊழியம் இல்லாத பகுதியையும் அதன் பெயரையும், புதிதாக ஊழியம் செய்ய அழைப்புள்ள பகுதியையும் குறித்துக் கொள்ளவும்.

d) மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் சபையாரின் உறவினர் மற்றும் அறிமுகமானவர்களின் முகவரிகளைப் பெற்றுக்கொளளவும்.

e) மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் நபர்களின் உறவினரை நேரடியாகச் சந்தியுங்கள.

f) மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் சபையாரின் உறவினர் மற்றும் அறிமுகமானவர்கள இல்லையெனில் மற்ற சபையின் விசுவாசிக்கு உறவினர் உள்ளனரா என்று பாருங்கள்.

GCI

g) அப்படி உறவினர் இருந்தால் இவர்களின் உறவு நல்ல நிலையில் உள்ளதா எனவும் சுவிசேஷம் குறித்த அவர்களின் மனநிலை என்ன என்பதையும் பாருங்கள்.

h) மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் சபையாரின் உறவினர் மற்றும் அறிமுகமானவர்களின் மத்தியில் சுவிசேஷக் கூட்டம் நடத்த ஆயத்தம் செய்யுங்கள்.

4. ஊழியம் செய்ய அதிக வாய்ப்புள்ள பகுதிகளைப் பார்வையிடுங்கள்.

a) போதகர், மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் சபையாரின் உறவினர் மற்றும் வேத பாடத்தை நடத்துபவர் ஆகியோர் பார்வையிடப்பட வேண்டியவர்களாவார்.

b) ஜெபத்துடன், ஜாக்கிரதையுடன் மற்றும் சமாளிப்புத்தன்மையுடனும் பார்வையிடுங்கள்.

c) தேவையில்லாத அர்ப்பணிப்பைச் செய்யாதீர்கள்.

5. குறிப்பிட்ட ஸ்தலத்தைத் தேர்ந்தெடுக்க சில முக்கிய காரணிகள். அப் 16 : 9

*"அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்றுஞு அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது."*

a) குறிப்பிட்ட ஸ்தலத்தைப் பற்றிய பரிசுத்தாவியானவரின் நடத்துதல்.

b) குறிப்பிட்ட ஸ்தலத்தில் உருவாகும் திறந்த வாசல் / வாய்ப்புகள் / அழைப்புகள்.

c) புதிய ஊழியம் துவக்க உபயோகப்படுத்தும் வழிமுறைக்கு ஏற்ற ஸ்தலதமாக இருத்தல்.

d) ஊழியத்தைத் தாங்கும் சபை அல்லது குழுவின் பொருளாதார எல்லை.

e) மற்ற சபையிலிருந்து தொலைவு

   i. சபையின் இலக்கு (ஒவ்வொரு சமுதாயத்திலும்)

GCI

ii. ஒவ்வொரு நபருக்கும் நடை பயண தொலைவில் சபை

iii. நகரங்களில் ஒரு கிலோமீட்டருக்கு ஒரு சபை.

6. சபை சந்திக்கும் இடத்தை நிர்ணயித்தல்

a) அநேகக் குழுக்கள் வீடுகளில் கூடுவர்.

i. மக்களை அவர்கள் இருக்கும் நிலையில் சந்திக்க வேண்டிய அவசியம்.

ii. சபைக்கு வர விருப்பமில்லாதவர்கள் கூட வீடுகளுக்கு வருவார்கள்.

iii. வாடகை மற்றும் கட்டுமான செலவு குறித்த கவலையில்லை.

iv. ஒரே இடத்தில் தொடர்ந்து சந்திக்க வேண்டியதின் அவசியம்.

v. குழுவாக எவ்விடத்தில் கூடுகிறார்களென்பது அக்குழு சபையாக வளர்வதை நிர்ணயிப்பதில்லை.

b) ஊழிய ஸ்தலத்தின் மையப்பகுதியில் அமைந்திருக்க வேண்டும்.

B. பலன் தரும் குழுவைக் கண்டறிந்து அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

1. சில குழுக்கள் மற்ற குழுக்களைவிட அதிக ஆர்வமாய்க் காணப்படும்.

a) யூதர்களை விட புற ஜாதியார் அதிக ஆர்வமாய்க் காணப்பட்டனர். மத்தேயு 10 : 6; 15:24; அப்போஸதலர் 11:19

*“ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல்ஞ பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள்.”*

GCI

b) தெசலோனிக்கேயரை விட பெரேயாவைச் சார்ந்தவர்கள் அதிக ஆர்வமாய் சுவிஷேத்திற்குச் செவிசாய்த்தார்கள். அப் 17: 11

c) படித்தவர்கள் அறிவாளிகளை வீட சாதாரண மற்றும் ஏழைகள் அதிக ஆர்வமாய் சுவிஷேத்திற்குச் செவிசாய்த்தார்கள்.

1. கொரிந்தியர்1: 27

*''ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்ஸ பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.''*

2, இன்று ஆர்வமாய்க் காணப்படும் குழு குறித்த உதாரணம்

a) பழங்குடியினர்

b) இடம் பெயர்ந்தவர்கள்

c) கல்வியறிவில்லாதவர்கள்

d) பாரம்பரிய விசுவாசத்தைக் கேள்வி கேட்பவர்கள்

e) உம் பகுதியில் ஆர்வமாய்க் காணப்படும் குழுவைக் கணக்கிடவும்

3, சுவிசேஷம் செவிகொடுக்கப் படுவதற்கான காரணிகள்.

a) மற்ற சுவிசேஷக் குழுக்கள் பெற்ற வெற்றியான அனுபவங்கள்

b) புதிய ஊழியம் துவங்க அழைப்புக்கள்

c) பழங்குடியினர் வாழும் பகுதிகள்

d) சமுதாய பொருளாதார மாற்றம் நிகழும் இடங்கள்

e) சுவிசேஷக் கூட்டம், சாட்சி பகர்தல் மற்றும் வீடுக் கணக்கீடு வாயிலாகக் கிடைக்கும் சாதகமான சூழல்கள்

GCI

C. சபை நிறுவும் ஊழியம் நல்ல நிலத்தில் செய்யப்படுவது சிறந்தது.

1. நிலத்தைப் பற்றிய இயேசுவின் உவமையில் ஒப்பிடப்பட்டுள்ள பதில்கள் **மத்தேயு 13: 3-9**

2. செவிசாய்க்காத குழுக்களில் தூசியை உதறிப்போடுதல் **மத்தேயு 10: 14**

3. செவிசாய்க்காத பகுதிகளில் தேவையற்ற முயற்சியைக் கைவிடல். **மத்தேயு** 7**: 6**

4. செவிகொடுக்கும் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். **அப்.**16**:9,10**

*"அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது.*

*10. அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதொனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி "*

D. சபை நிறுவும் ஊழியம் முதலில் பெரியவர்கள் மத்தியில் செய்யப்படுவது சிறந்தது.

1. சிறியவர்களை விடப் பெரியவர்களுக்குத்தான் சிறியவர்கள் மீது அதிக ஆதிக்கம் உள்ளது.

- ✓ பெற்றோரை நாம் ஆதாயப்படுத்தினால் முழுக்குடும்பத்தையும் ஆதாயப்படுத்துகிறோம்.
- ✓ பெற்றோரின் எதிர்ப்பை மீறி செயல்படுவது சிறுவர்களுக்குக் கடினமாகிறது.

2. பெரியவர்கள் புரிந்து கொள்ளவும், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும் ஞானஸ்நானம் பெறவும் முடியும்.

3. பெரியவர்களால் பொருளாதார ரீதியாக ஊழியத்தைத் தாங்க முடிகிறது.

GCI

E. பயனில்லாத மற்ற செயல்களில் கவனத்தைத் திசை திருப்பாதீர்கள்.

1. ஒரு பகுதியில் பயன்பட்ட ஊழிய உத்தி மற்றும் திட்டம் மற்றொரு பகுதியிலும் பயன்படும் என்று எண்ணலாகாது.

2. கட்டிடம் கட்டுவது என்பது தேவ ராஜ்யத்தைக் கட்டுகிறது என அவசியமில்லை.

3. பிற மதத்தைத் தாக்கிப் பேசுவதைத் தவிர்க்கவும்.

F. உங்கள் அணுகுமுறையைக் கிரமப்படுத்தவும்

பரிசோதனையின் காலத்திற்குப் பின், அமர்ந்து சில திட்டங்களை ஏற்படுத்துங்கள். அந்தத் திட்டங்கள் மாறுதலடையவும் வாய்ப்புள்ளது.

1. தாங்கள் எங்கே செல்ல விரும்புகிறீர்கள்?

2. அங்கே செல்ல எவ்விதம் திட்டமிட்டுள்ளீர்கள்?

3. தாங்கள் சாதிக்க விரும்புவது என்ன?

G. எல்லாவற்றையும் எளிமையாகக் கையாளுங்கள்.

1 கொரிந்தியர் 2:1 -2

*"சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.*

*2. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்."*

1. குழப்பமான திட்டங்கள் சோர்வை உண்டாக்கி விடும்

2. பயனில்லாத திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை விட்டுவிடத் தயங்க வேண்டாம்.

3. மரித்த ஒரு திட்டத்திற்கு உயிர்தர முயலுதல்.

4. 'பரிசுத்தமாகக்' கருதப்படும் முறைகள் மற்றும் செயல்படாத பாரம்பரியத்திலும் அடைபட்டுக் கிடக்காதீர்கள். இணக்கமாயிருங்கள்.

5. தொடர்ந்து பரிசோதித்து மாற்றம் மற்றும் வளர்ச்சிக்கு வழிவகை செய்யுங்கள்.

GCI

H. எதிர்ப்பு உள்ள பகுதிகளில் அதிக சத்தம் போடாதீர்கள்.

1. நிறுவப்பட்டுள்ள எந்த சமயத்தையும் தாக்காதீர்கள்.

இம்மதங்கள் சமுதாயத்திலும், அரசிலும் அமிழ்ந்திருக்கும் மக்களுக்கு மத்தியில் ஒருவர் கிறிஸ்துவிடம் வந்தால் ஜனங்கள் அதைத் தாக்க முயற்சிப்பர்.

2. மத ரீதியான தடைகளை உருவாக்கியுள்ள அரசுகள்.

அதிக கவனம் தேவை. ஆசியக் கண்டத்தின் பல நாடுகள் இந்த நிலையில் உள்ளன.

I. உங்களோடு ஊழியம் செய்ய அழைக்கப்பட்ட, வரம் பெற்ற மற்றும் தாழ்மையான ஆண்களையும் பெண்களையும் தேர்ந்தெடுங்கள்.

1. நீங்கள் தேர்ந்தெடுக்கும் மக்கள் உங்கள் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பர்.

2. ஒவ்வொரு நபரின் வரத்திற்கேற்ப ஊழியத்தைக் கொடுங்கள்.

3. சுய பெருமை யாரிடமாவது (நீங்கள் கூட) இருக்கிறதா எனக் கவனமாய் ஆராயுங்கள்.

J. உங்கள் வாய்ப்புகளை ஞானமாய்ப் பயன்படுத்துங்கள.

1. கட்டடங்கள் வாங்கவும் பராமரிக்கவும் அதிக செலவாகும். எனவே சிறிது காலத்திற்கு அவை உங்களுக்கு அவசியமில்லை.

2. தேவனுடைய பணத்தை வைத்துக் கொண்டு உங்களை மட்டுமே வளப்படுத்திக் கொள்வது ஏற்புடையதல்ல. தொடர்ந்து உண்மையான கணக்குக் காண்பியுங்கள்.

## IV. நிகழ்கால சபை நிறுவும் வழிமுறைகள

A. தாய் - மகள் சபை நிறுவுதல்

இந்த வழிமுறையில், ஒரு சபையானது தனது சில உறுப்பினரை அனுப்பி புதிய இடத்தில் ஒரு புதிய ஏற்பாட்டு சபையைத் துவக்குவதாகும்.

GCI

தீமோத்தேயு ஸ்டார் என்னும் ஊழியர் இம்முறையே சந்தேகத்திற்கு இடமில்லாமல் சிறந்த ஒன்று என்கிறார். ஒரு தாய் சேயைப் பெற்றெடுப்பது போல, சுபை புதிய சபையைப் பெற்றெடுக்கிறது. புதிய இடத்தில் செய்யப்படும் ஊழியத்திற்கு பலமான சபையின் ஆதரவும் அனுபவமும் இருப்பதால் இதுவே சிறந்த முறை எனலாம்.

இந்த வழிமுறையைப் பயன்படுத்தி தாய் சபை சில குடும்பத்தினரைப் பல கிலோமீட்டருக்கப்பால் உள்ள புதிய சபையை ஆரம்பிக்க ஊக்கமளிக்கிறது. தேவையான பகுதியைக் கண்டறிந்து அந்தப் பகுதியிலுள்ள குடும்பங்களை ஆய்வு செய்து ஏற்ற காரியங்களைச் செய்ய வேண்டும்.

B. வேத பாடக் குழு வழிமுறை

சபை நிறுவுபவர் ஒரு பகுதிக்குச் சென்று, தமது இடத்திலோ அல்லது பொதுவான ஒரு இடத்திலோ வேத பாடத்தைத் துவக்குகிறார். அவரது நீண்ட கால தரிசனம் சபையைக் கட்டுவது என்றாலும் அவரது உடனடி இலக்கு ஒரு குழுவை ஏற்படுத்துவதே. அதன் வாயிலாக கர்த்தருக்கு ஆதாயப்படுத்தி தேவ வசனத்தில் வளர்க்கிறார். வேதபாடம் என்பது சபையின் பாதி தூர வழி எனலாம். வேத பாடக் குழுவின் வளர்ச்சியே ஒரு சபையாக உருவெடுக்கிறது.

C. செல்குழு அபிவிருத்தித் திட்ட வழிமுறை

சுவிசேஷமயமாக்கல் மற்றும் சீஷத்துவத்திற்காக செல்குழுவை நிலைநாட்டுவது கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் பெருக்குவதற்காகவே. பின்னர் வளர்ந்து வரும் கிறிஸ்தவர்கள் மத்தியில் சபையை நிலைநாட்டிக் கொள்ளலாம்.

D. உள்ளூர் ஐக்கியத்தின் வழியில்

இது பங்குதாரர் வழிமுறை என அழைக்கப்படுகிறது. இதன் உடன் சபைகள் ஒன்றிணைந்து ஒரு புதிய சபையைத் துவக்கலாம்.

E. புதிதாகச் சபை நிறுவுபவர்

புதிதாகச் சபை நிறுவுபவர் சபை நிறுவும் நோக்கத்துடன் ஒரு புதிய இடததிற்குச் செல்கிறார். இவ்வழிமுறை தேவை உள்ள இடத்தை உணர்ந்து அப்பகுதியில் சபை நிறுவ அநேக ஊழியர்களால் பயன்கடுத்தப்படுகிறது. இப் பகுதியில் உள்ள இரட்சிக்கப்படாத மக்களைக் கருத்தில் கொள்கிறார்கள். ஆகவே அவர் மாற்றத்தை ஏற்படுத்துபவராக இலட்சியத்தைச் சுமந்து கொண்டு இப்பகுதிக்கு வருகிறார்.

ஒரு ஸ்தாபனத்திலிருந்து ஊழியம் செய்தால் அந்த ஊழியத்திற்குத் தேவையான முழுமையான அல்லது பகுதி உதவி ஸ்தாபனத்தால் செய்யப்படுகிறது.

GCI

F. திறந்த வெளிப் பிரசங்க மையங்கள்

வளர்ந்த சபையானது உணவு விடுதிகள், சாலையோரங்கள் போன்ற பகுதிகளைத் திறந்த வெளிப் பிரசங்க மையங்களாகப் பயன்படுத்தி, அதன் வாயிலாக ஆதாயப்படுத்தப்பட்டவர்கள் பலமுள்ள சபையாக மாற வாய்ப்பு உள்ளது.

G. ஒரே கட்டிடத்தில் இரண்டாவது சபை

இந்தப் புதிய சபையானது வழக்கமான ஆராதனை முறையைப் பின்பற்றாமல் புதிய ஆராதனை உத்தியைக் கையாளுகிறது.

H. ஒரே கட்டிடத்தில் வேறொரு மொழி ஆராதனை

சில சபைகளில் ஒரே இடத்தில் இரண்டாவது, 3 வது அல்லது 4வது மொழிகளிலும் ஆராதனை நடத்துகின்றனர்.

I. "துணைக்கோள்" சபைகள்

இம்முறை கொரியா, மலேசியா போன்ற நாடுகளில் துவக்கப்பட்ட ஒன்றாகும். இதன் நோக்கம் பகுதி சுயாட்சி உடைய "துணைக்கோள்" சபைகளை நிறுவி, மக்கள் இரண்டு சபை உறுப்பினராகச் செயல்படுகின்றனா (தலைமை சபையிலும், "துணைக்கோள்" வீட்டு சபையிலும்). இரு வாரங்கள் "துணைக்கோள்" சபையிலும் மற்ற வாரங்களில் பல வீட்டு சபைகள் கலந்து கொள்ளும் தலைமை சபையிலும் கூடுகின்றனர்.

## V துனபங்கள மற்றும் நெருக்கங்களையும் எதிர்கொள்ளுதல்

A. சபை நிறுவுதலில் உள்ள ஆவிக்குரிய நெருக்கடிகள்

1. திறந்த வாசலைக் குறித்த ஆவிக்குரிய நெருக்கடிகள

*2 கொரிந்தியர் 2* ***: 12-13; 1*** *கொரிந்தியர் 16* ***:9***

அநேகத் திறந்த வாசல்களிருந்தும் எதிர்ப்புகளினிமித்தம் தன் ஆவியில் இளைப்பாறுதலோ அல்லது மன சமாதானம் இல்லாதிருந்த நிலையைக்

GCI

குறித்து பவுல் பேசுகிறார். தடைகளுடன் கூடிய திறந்த வாசல் அதிக நெருக்கடியைக் கொடுக்கிறது.

*1 கொரிந்தியர் 16 :9*

***"ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்."***

2. மண்பாண்டமென்னும் நெருக்கடி *2 கொரிந்தியர் 4 :7-10; 7:3-6*

நமது பெலவீனத்தினிமித்தம் நமது ஊழியத்தில் சில குறைவுகள் எப்போதும் உள்ளன. இதன் சரியான பரிகாரம் அவரது பூரண நிறைவு.

*2 கொரிந்தியர் 4 :7-10*

***7. இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.***

***8. நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை.***

***9. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.***

***10. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.***

3. அன்றாடத் தேவை குறித்த நெருக்கடி
*2 கொரிந்தியர் 11 :27-29; கொலோசெயர் 2: 1-2*

சபையைக் குறித்த கரிசனை மற்றும் பொறுப்பினைச் சுமப்பதால் வரும் தொடர்ச்சியான நெருக்கடி

4. பிரிந்து போதல், மாய்மாலம் குறித்த நெருக்கடி கலாத்தியர் 1:6; 2: 13

மக்கள் நம்மை விட்டுப் பிரிந்து போவது நமக்கு அதிக வேதனையைக் கொடுக்கிறது, ஏனெனில் நாம் அவர்களுக்காகச் செலவழித்த நேரம் கணக்கிட முடியாதது.

5. உறக்கமில்லாத இரவுகள் 1 தெசலோனிக்கேயர் 3 :10; 2தீமோ. 4:5

பவுல், அவர்கள் ஆவிக்குரிய நலனுக்காக அல்லும் பகலும் ஜெபிப்பதைக் குறித்து விளக்கி, தீமோத்தேயுவை பாடுகளைச் சகிக்க உற்சாகப்படுத்துகிறார்

6. சுவிசேஷப் போர் குறித்த நெருக்கடி எபேசியர் 6 : 12; 2தீமோ. 4:5

GCI

சுவிசேஷப் பணி மிகவும் கடின உழைப்பையும் அதிக சகிப்பையும் எதிர்பார்க்கிறது. இது அந்தகார வல்லமைக்கு எதிரான ஒரு யுத்தமாகும்.

B. சபை நிறுவுதலில் உள்ள ஊழியரீதியான நெருக்கடிகள்

1. கரிசனை ஊழிய நெருக்கடிகள

மக்களுக்காகக் கரிசனை, இரகசியத்தைக் காத்தல் மற்றும் தவறான ஆதாயத்தை எதிர்த்தல் ஆகியன நெருக்கடிகள் நிறைந்த நாளை ஏற்படுத்துகின்றன.

2. உணர்வுரீதியான ஊழிய நெருக்கடிகள்

ஏழைகளின் தேவை, துன்பம், வருத்தம், வியாதி உள்ள மற்றும் மரித்துக் கொண்டிருக்கும் மக்களுக்குரிய உணர்வுரீதியான கரிசனை நெருக்கடிகளை உருவாக்குகின்றன.

3. சபையாரின் உணர்வற்ற நிலை

சபைக்குள் ஒற்றுமை, ஐக்கியம் மற்றும் மக்களைத் திருப்திப்படுத்த எடுத்துக்கொள்ளும் அதிக உழைப்பு மதிக்கப்படாத நிலையில் சோர்வுண்டாக்குகிறது.

4. மாலை நேர, வார இறுதி உழைப்பு

பல அழைப்புகளுக்கும் பதிலளித்துக் கொண்டு, ஒவ்வொரு மாலையும் உழைப்பு மற்றும் வார இறுதி வேலைகள் தன் குடும்பத்தில் அதிக நெருக்கடியை உருவாக்குகின்றன.

5. சமுதாய விமர்சனம்

ஒரு சில நண்பர்கள், சில ஆலோசகர்கள் மற்றும் பல விமர்சன வார்த்தைகள் போதகரின் தனிப்பட்ட குடும்ப வாழ்விற்கு எதிராகத் தொடுக்கப்படும்போது அதிக நெருக்கடியை உருவாக்குகிறது.

6. ஆவிக்குரிய முதிர்ச்சி

நாம் போதகராக இருக்கும் போது நாம் எப்போதும் ஆவிக்குரிய வலிமை உள்ளவர்களாய்க் காணப்படுவதை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

7. ஸ்தாபன எதிர்பார்ப்புக் குறித்த நெருக்கடி

GCI

சபை வளர்ச்சியைக் குறித்த கேள்விகளுக்குப் பதிலளித்தல் மற்றும் அறிக்கைகளை எழுதுவது மிகவும் பாரமானவை.

8. தனிமைப்படுத்தப்படல் குறித்த நெருக்கடி

மற்ற போதகர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படும் போது சபை நிறுவும் ஊழியர் அதிகத் தனிமையையும் கைவிடப்பட்ட நிலையையும் உணர்கிறார்.

## VI சபை வளர்ச்சிக்குத் உதவும் தத்துவங்கள.

A. ஆவிக்குரிய வளர்ச்சி

1. தேவத் திட்டத்திற்குக் கீழ்ப்படிதல்

சபையைக் குறித்த வேதாகமத் திட்டம் சுய உதவி (தசம பாக, காணிக்கைகள்), சுய ஆளுகை மற்றும் சுய ஊழியப் பெருக்கம்

2. பொறுப்பு உணர்ச்சி

உதவி, ஆளுகை மற்றும் சுவிசேஷ ஊழியத்தில் கிறிஸ்தவர்கள் வளர உதவி செய்தல் ஆகியவற்றில் பொறுப்பாய் செயல்படுதல். தசமபாகத் திட்டமானது எல்லாரையும் பொருளாதாரப் பொறுப்பு உள்ளவர்களாய் மாற்றுகிறது.

3. போதகருடன் நல்ல உறவு

சபையாக இணைந்து போதகருக்கு உதவி செய்வதால் அவர்களுடைய பரஸ்பரப் பொறுப்பு உணர்ச்சி பலப்படுகிறது. சரியாய் தசம பாகம் செலுத்தும் 10 அல்லது அதிகமானவர்கள் இருந்தால் அவர்கள் வளரும் நிலையில் மிகவும் ஏழையான நபர் கூட அவருக்கேற்ற விதத்தில் போதகருக்கு உதவி செய்ய முடியும்.

4. விசுவாசம் மற்றும் தியாகம்

இப்படிப்பட்ட சபையின் சுய வளர்ச்சிக் கொள்கையில் எதிர்கொள்ளும் சவால்கள் போதகரையும் சபையாரையும் விசுவாசம் மற்றும் தியாக ஆவியை வளர்த்து அதிக ஊக்கமான ஊழியத்திற்கு வழிவகை செய்கிறது.

5. செயல்முறையில் கற்றுக்கொள்ளுதல்

GCI

மக்கள் வேத வசனத்தைக் கற்றுக் கொண்டு மற்றவர்களுக்குப் போதிப்பதால் வளர்ச்சியடைவர். அவர்கள் தலைமைத்துவம், தாலந்துகள் மற்றும் ஊழியத்தில் தேவன் அவர்களுக்கு உதவி செய்கிறார்.

B. எண்ணிக்கை வளர்ச்சி

1. சிறு குழுக்களைக் குறித்த கரிசனை

பகுதி நேர ஊழியர்கள் சிறு குழுக்களுக்குத் தேவையான தலைமைத்துவத்தைக் கொடுத்து அவர்கள் எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளர உதவி செய்கிறார்கள்.

2. கலாச்சார ஏற்புத்தன்மை

சுய அதிகாரமுடைய சபை சமுதாயத்தால் கலாச்சார ஏற்புத்தன்மை உடையதாக நோக்கப்படுகிறது. அவர்கள் சபை வெளி நாட்டவரால் நடத்தப்படுகிறதாகவும் வெளி நாட்டைச் சார்ந்தது எனவும் நோக்குகிறதில்லை. சுவிசேஷத்திற்குத் தடையாக உள்ள கலாச்சார எதிர்ப்புக்கள் நீக்கப்படுகின்றன.

3. இயல்பான சாட்சி

பொறுப்பு உணர்ச்சி மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியால் கிறிஸ்தவர்கள் பல குடும்பங்களையும், நண்பர்களையும் அயலகத்தாரையும் ஆதாயப்படுத்த முடிகிறது.

C. இடரீதியான வளர்ச்சி

1. ஊழியம் : சபை நிறுவுதல்

ஸ்தல சபை சபை நிறுவுதலைத் தனது ஊழியமாக நோக்கும்போது, வீடுகள் மற்றும் சபைகளில் அதன் ஊழியத்தால் பூகோளரீதியாகவும் எண்ணிக்கையிலும் சபையை வளரச் செய்கிறது.

2. எல்லையில்லா வளர்ச்சி

சுவிசேஷம் அறிவிக்கப்படாத பகுதிகளில் புற தேச மற்றும் உள்நாட்டுச் சபைகளின் உதவியுடன் புதிய சபைகளைத் துவக்கலாம். ஆனால் அவை சுய உதவியையும் தலைமைத்துவத்தையும் வளர்த்துக் கொள்ளும்போது எல்லையில்லா வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கிறது.

GCI

# VII. சுய ஆளுமையுள்ள சபை நிறுவுதல்

A. சுய ஆளுமையுள்ள சபை நிறுவுதலின் தத்துவங்கள்

1, சொந்த மக்களிடம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல்.

2, அவர்களுக்கு ஏற்ற கலாச்சார ஏற்புத்தன்மையை உபயோகித்தல்

3, தமது மக்களிடம் விவாதங்களை முன் வைத்து சுவிசேஷத்திற்கு இணங்கப் பண்ணுதல்.

4, அவர்களுக்கு ஏற்ற கட்டடங்களில் கூடிவரச் செய்தல்.

5, சபையைச் சார்ந்த ஒருவரே சபையை நடத்துதல்.

6, சுய உதவி, சுயாட்சி, சுய ஊழியப் பெருக்கம்.

7, பரிசுத்த ஆவியின் வல்லமையைச் சார்ந்து கொள்ளுதல்.

B. சபை நிறுவுதலில் உள்ள கடின காரியங்கள்

1, தன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க விரும்பாத ஊழியர்கள்

2, ஸ்தாபன உதவியை இழக்க விரும்பாத ஊழியர்கள்

3, பொருளாதார பாரத்தைச் சுமக்க விரும்பாத சபைகள்.

4, சிறிய எளிய சபைகள் தங்கள் போதகருக்கு உதவ இயலாத நிலை.

5, பக்கத்து ஊழியர்களின் உதவிகளை ஒப்பிட்டுப் பார்த்தல்.

6, உபத்திரவம், இரகசிய கிறிஸ்தவர்கள், வளராத சபை குறித்த பயம். எதிர்ப்பு மிகுந்த பகுதிகள்.

7, சுய ஆளுமைக் குறித்த வரம்பு மீறிய வலியுறுத்தல்கள். இணக்கமற்ற விமர்சனம்.

GCI

List of References:


1. Antioch Blueprint
2. Bush, Andrew. GCI notes on Church Planting, November 1990
3. Halloway, Gerry. GCI notes on Church Planting.
4. Hodges, Melvin. The Indigenous Church, Gospel Publishing House, Missouri
5. MacGavran, Donald. Understanding Church Growth, Eerdsman: Missouri, Grand Rapids
6. Montgomery, Jim. DAWN 2000
7. Southern Baptist Church Growth Program.
8. Wagner, Peter. Church Planting for a Great Harvest, Regal Books: USA, 1990